Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 206 | திங்கட்கிழமை 20 ஜூன் 2022 | ஆனி 06 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ. 50



"கேதீச்சரத்தான்ர புண்ணியத்தாலயாவது இஞ்ச டொலர் மழை பெய்தால் நல்லம் தான் பாருங்கோ..."

மூச்சந்தி மூர்த்தி முரளி

# எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க அரசு பிரயத்தனம்

- வரிசைகளைக் குறைக்க பல்வேறு நடைமுறைகள் ஆராய்வு
- 4 நாள்களின் பின்னரே எரிபொருள் வரும் சாத்தியம்
- பல்வேறு இடங்களில் மக்கள் கொந்தளிப்பு

கொழும்பு, ஜூன் 20

எரிபொருள் தட்டுப்பாட்டால் நாடு செயலிழக்கும் அபாய கட்டத்தை எட்டியுள்ள நிலையில், நெருக்கடிகளைத் தணிப்பதற்கு அரசாங்கம் பலத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பெற்றோல் மற்றும் டீசலுக்காக மக்கள் பல கிலோ மீற்றர் தூரத்துக்கு வரிசைகளில் காத்திருக்கும் நிலையில், பல இடங்களில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் மேலும் மோசமடையும் என்பதால் அரசாங்கம், மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகத்தை இலகுவாக்கும் திட்டங்களைத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. 15 ➤

## ஐ.எம்.எப். அதிகாரிகள் சிறிலங்காவுக்கு வருவர்

கொழும்பு, ஜூன் 20

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இன்று சிறிலங்காவுக்கு வரவுள்ளது.

இந்தக் குழு எதிர்வரும் 30 ஆம் திகதிவரை இங்கு தங்கியிருந்து ஊழியர் மட்ட உடன்படிக்கையை எட்டுவதற்கு சிறிலங்கா அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடும் 15 ➤

திருக்கேதீச்சர கும்பாபிஷேகத்துக்காக

## தமிழகத்தில் இருந்து விசேட விமானசேவை!

யாழ்ப்பாணம், ஜூன் 20

திருக்கேதீச்சரக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு தமிழகத்தின் திருச்சி மற்றும் சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு விசேட 15 ➤



## வவுனியா மாமடுவில் மனித உடல் எச்சங்கள்

பொலிஸார் தீவிர விசாரணை

வவுனியா, ஜூன் 20

வவுனியா, மாமடு காட்டுப் பகுதியில் மனித உடல் எச்சங்கள் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த மனித உடல் 15 ➤




## பீரிஸின் கொடும்பாவி எரித்து அரசுக்கு எதிராக போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிராகநேற்றுயாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்ட நிலையில், ஆர்ப்பாட்டத்தில் சிறிலங்கா 15 ➤



## வழிப்பறியில் ஈடுபட்டோரை வசமாகக் கவனித்த மக்கள்!

வல்லைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியில் அச்சுவேலி- வல்லைப் பகுதியில் வழிப்பறியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று மதியம் இறைச்சி வியாபாரி ஒருவரிடம் இருந்து 15 ➤

உ/த, சா/த, புலமைப்பரிசில் உள்ளிட்ட

## தேசியப் பரீட்சைகள் மீண்டும் பிற்போடல்!

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை அடுத்து, இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை, சாதாரணதரப் பரீட்சை மற்றும் புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றை ஒத்திவைக்க 15 ➤

## சிக்கலைத் தீர்க்க கச்சதீவில் பொருளாதார மீட்பு வலயம்!

மருத்துவர் சி.யமுனாநந்தா ஆலோசனை

கொழும்பு, ஜூன் 20

வடக்குக்கு எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்களை இலகுவாகப் பெறுவதற்கு கச்சதீவு புனிதப் பிரதேசத்தை பொருளாதார மீட்பு வலயமாகச் செயற்படுத்துவது சிறந்த பலனைத் தரும் என்று மருத்துவர் சி.யமுனாநந்தா ஆலோசனை தெரிவித்துள்ளார். அவர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் பொருளாதாரப் பேரிடர்ஒரு போரில்லாத போராகும். 15 ➤

தாயின் இறுதிக் கிரியையில்

## பார்த்தீபன் பங்குகொள்ள நேற்று 'பரோல்' அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 20

26 ஆண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதி வி.பார்த்தீபன், நேற்று தனது தாயின் இறுதிக் கிரியைகளில் 15 ➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எரிபொருள் பவுஸரை மறித்துப் போராட்டம்

## இராணுவத்தினர் குவிப்பு, வவுனியாவில் பதற்றம்

**வவுனியா, ஜூன் 20**

**வவுனியாவில் எரிபொருள் பவுஸர் ஒன்றை முற்றுகையிட்டு பொதுமக்கள் போராட்டம் நடத்தியதை அடுத்து அந்தப் பகுதியில் கடும் பதற்றம் ஏற்பட்டது. இதையடுத்து இராணுவத்தினர் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.**

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வவுனியா, பழைய பேருந்து நிலையம் முன்பாகவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 4 நாள்களாக மக்கள் எரிபொருளுக்காக நீண்டவரிசையில் காத்திருந்த போதிலும் எரிபொருள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதையடுத்து ஏற்பட்ட விரக்தியாலேயே மக்கள் குறித்த எரிபொருள் பவுஸரை வழி மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

எனினும் பொதுமக்கள் பவுஸருக்கு வழிவிடாமல் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

போராட்டம் மேலும் தீவிரமடையலாம் என்ற அச்சத்தில் அந்தப் பகுதிக்கு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

நீண்ட பேச்சுக்களின் பின்னர், அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அவசியத் தேவைக்காகக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த 500 லீற்றர் பெற்றோலை ஒருவருக்கு 500 ரூபாவுக்கு என்ற அடிப்படையில் பகிர்ந்து வழங்க எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் சம்மதித்ததை அடுத்து பவுஸர் விடுவிக்கப்பட்டது.

பின்னர் இராணுவப் பாதுகாப்புக்கு மத்தியில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. (ம-18-110)

## எரிபொருள் நிலைய மோதல்; 8 பேருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜூன் 20

அத்துருகிரிய எரிபொருள் நிலையத்தில் இடம்பெற்ற மோதலில் கைதுசெய்யப்பட்ட 9 பேரில் 8 பேருக்கு விளக்கமறியலும் ஒருவருக்குப் பிணையும் வழங்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துருகிரியவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 17ஆம் திகதி நாள்முழுவதும் காத்திருந்த மக்கள் எரிபொருள் கிடைக்காமையால் ஏமாற்றமடைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தைக் கட்டுப்படுத்த முயற்சிசெய்த கடமையிலிருந்த பொலிஸார் மீதும் மக்கள் தாக்குதல் மேற்கொண்டனர். தாக்குதலில் காயமடைந்த 6 பொலிஸார் ஹோமாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணொருவர் உட்பட 9 பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.

அவர்கள் கடுகலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது 8 பேரை விளக்கமறியலில் வைக்கவும் மற்றைய சந்தேகநபரான பெண்ணை பிணையில் விடுவிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-இ)

### எரிபொருளுக்காகக் காத்திருக்கும்

## மக்களைத் தாக்கினால் அது ஆபத்தில் முடியும்

*சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூன் 20

எரிபொருளுக்காக நீண்டவரிசைகளில் காத்திருக்கும் மக்கள் மீது பொலிஸார் தாக்குதலை மேற்கொண்டால், அது ஆபத்தில் முடியும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

சமையல் எரிவாயு உட்பட ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கு மக்கள் பெரும் தட்டுப்பாட்டை எதிர்கொள்கின்ற நிலையிலேயே எரிபொருளுக்காகவும் மக்கள் நீண்டவரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

பொதுமக்கள் பலர் தங்கள் வருமானத்தை இழந்துள்ளனர் தங்கள் குடும்பத்தினருக்கு உணவு வழங்குவதற்கு வழியில்லாத நிலையில் உள்ளனர். மக்கள் வரிசைகளில் நிற்கும்போதும் மருந்துகள் இன்மையாலும் பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

இந்த மோசமான நிலைமை மக்களை விரக்தி நிலைக்குத் தள்ளியுள்ளது அதன் காரணமாக சீற்றமும் விரக்தியும் காணப்படுகின்றது. கடந்த சில நாள்களாக நாட்டின் பல பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையங் களில் மக்கள் மத்தியில் அதிருப்தி தோன்றிய பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பொலிஸாரினதும் இராணுவத்தினரினதும் குடும்பத்தவர்களும் இதேநிலைமையை எதிர்கொள்வதால், அவர்கள் பொதுமக்களை கையாள்வதில் மிகுந்த பொறுமையுடனும் எச்சரிக்கையுடனும் செயற்படுவது மிகவும் முக்கியம்.

பொலிஸார் தங்கள் கடமைகளைச் செய்யும்போது புரிந்துணர்வுடனும் மிகுந்த பச்சாதாபத்துடனும் செயற்படுவதும் பொதுமக்களின் துன்பத்தை ஏற்றுக்கொள்வதும் அவசியம். சட்டநடைமுறை அதிகாரிகள் அனைத்துச் சம்பவங்களின் போதும் நியாயமாகவும் பாரபட்சமின்றியும் செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (ம)

## கல்வியங்காடு சந்தைத் தொகுதி எரிபொருள் நிலையத்தில் முறுகல்

*இராணுவம், பொலிஸ் குவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டு சந்தை தொகுதியுடன் காணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில், எரிபொருள் விநியோகத்தின்போது நேற்றுக் குழப்பமான நிலைமை ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று அதிகாலை முதல் நீண்டவரிசையில் பொதுமக்கள் காத்திருந்துள்ளனர். முற்பகல் 10.30 மணியளவிலேயே அந்த நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் வந்துள்ளது.

எரிபொருள் கிடைத்தவுடன், பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணியில் ஈடுபட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நீண்டநேரம் வரிசையில் காத்திருந்தவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்தே அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

பின்னர் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (ம)

### எரிபொருள் கிடைக்காமையால்

## பரீட்சைத் திருத்துநர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்டவர்கள் தமக்கு முன்னுரிமையில் எரிபொருள் பெற்றுத்தருமாறுகோரி நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு முன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்று வருகின்றன.

தூரப் பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு வந்து மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு அவர்கள் வசிக்கும் பிரதேசங்களில் எரிபொருள் பெறுவதற்கு வழங்கப்பட்ட படிவத்துக்கு எரிபொருள் விநியோகிக்கப்படுவதில்லை எனத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து இதுகுறித்து யாழ். மாவட்டச் செயலரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த நிலையில் கல்வியங்காட்டில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதையடுத்து பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. (ச-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் வரிசையை சமாளிக்க யாழில் பங்கீட்டு அட்டைத் திட்டம்!

## மாவட்டச் செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 20

தற்போது நிலவும் எரிபொருள் பற்றாக்குறையை அடுத்து பங்கீட்டு அட்டை ஊடாக எரிபொருள் வழங்குவதற்கு ஏதுவாக பிரதேச செயலகங்கள் ஊடாக எரிபொருள் விநியோக அட்டை வழங்கப் படவுள்ளது.

இது தொடர்பாக அனைத்துப் பிரதேச செயலர்களுக்கும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசனால் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்குரிய எரிபொருள் விநியோக அட்டையை அவர்களின் குடும்பப் பதிவு அட்டையின் பிரகாரம் வதிவிடத்துக்குரிய பிரதேச செயலர் ஊடாக வழங்க வேண்டும்.

வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் வகைப்படுத்தலின் அடிப்படையில் பிரதேச செயலர்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தைக் குறிப்பிட்டு எரிபொருள் விநியோக அட்டையை வழங்க வேண்டும்.

பிரதேச செயலர்கள் தங்கள் பிரிவுக்குத் தேவையான எரிபொருள் விநியோக அட்டைகளை மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள், கார், கனரக வாகனங்கள், உழவியந்திரம், விசேட தேவைக்குரிய வாகனங்கள் என்பவற்றின் எண்ணிக்கைக்கு ஏற்ப தாபனக் கிளையில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் அல்லது அரச உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் விநியோக அட்டை அந்தத் திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் அந்த உத்தியோகத்தர் வசிக்கும் பிரதேச செயலர் ஊடாக வழங்கப்பட வேண்டும்.

திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான எரிபொருள் விநியோக அட்டைகளை அந்தத் திணைக்களத் தலைவர்கள் மோட்டார் சைக்கிள், கார் என்ற வாகன வகைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கடிதம் மூலம் உறுதிப்படுத்தி மாவட்டச் செயலகத் தபானக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-20,27)

# இன்னும் ஓரிரு வாரங்களில் சுகாதாரத்துறை முடங்கும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 20**

**எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்துச் சேவை நெருக்கடி ஆகியவற்றின் காரணமாக இன்னும் ஓரிரு வாரங்களில் சுகாதாரத்துறை முற்றாக செயலிழக்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதாரத்துறை உள்ளடங்கலாக அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அனைத்துச் சேவைகளும் எந்த வித இடையூறுமின்றி இயங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

ஆனால், தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மருத்துவர்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த சுகாதார ஊழியர்களும் உரிய நேரத்துக்கு மருத்துவமனைக்குச் செல்லமுடியாத நிலைக்கு முகங்கொடுத்திருக்கின்றனர்.

ஏற்கனவே உயிர்காக்கும் மருந்துகள் உள்ளடங்கலாக அத்தியாவசிய மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும், மருத்துவர்கள் மனிதாபிமான அடிப்படையில் ஏதேனும் மாற்றுவழிகளைப் பயன்படுத்தி மருத்துவசேவையை இயலுமானவரை வழங்கி வருகின்றனர். ஆனால், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகப் போக்குவரத்து நெருக்கடி தொடருமேயானால், எதிர்வரும் ஓரிரு வாரங்களில் சுகாதாரத்துறை முற்றாக செயலிழக்கக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

இதுகுறித்து சுகாதார அமைச்சுடன் இணைந்து மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் பேச்சு நடத்தியிருந்தோம். அதில் மருத்துவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்திருந்த போதிலும், இன்னமும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே சுகாதாரத்துறையின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இந்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும் - என்றார். (ம)

# காகத்தால் தடையான எரிபொருள் விநியோகம்

கொழும்பு, ஜூன் 20

பண்டாரகம பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் காகம் ஒன்றால் சுமார் அரைமணிநேரம் எரிபொருள் விநியோகம் தடைப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டாரகம நகர் பகுதிக்கு 5 நாள்களின் பின் நேற்றுமுன்தினம் எரிபொருள் வழங்கப்பட்டது. அதையடுத்து எரிபொருளைப் பெறுவதற்கு மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்தனர்.

இந்த நிலையில் எரிபொருள் நிலையத்துக்கு அருகிலிருந்த மின்மாற்றியொன்றில் காகமொன்று சிக்கி உயிரிழந்ததால் மின்தடை ஏற்பட்டுள்ளது.

அரைமணிநேரம் அங்கு மின்சாரம் இல்லாமையால் எரிபொருள் விநியோகம் தடைப்பட்டுள்ளது. பின்னர் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து காகத்தைத் அகற்றிய பின்பே எரிபொருள் விநியோகம் இயல்பு நிலைக்குத் திரும்பியது. (ச-இ)




**"அண்ணன் எப்ப போவான், திண்ணை எப்ப காலியாகும்" எண்ட நிலையிலதான் கொழும்பில பெரும் அரசியல் புள்ளியள் 'ஜனாதிபதி' பதவியில கண் வைச்சுக்கொண்டு திரியினம். இப்ப ஜனாதிபதியா இருக்கிற கோத்தாபய பதவி விலகிற சிலமனையே காணேலை, அதோட முறைப்படி அவரின்ர பதவிக்காலம் முடிய இரண்டரை வருசத்துக்கு கிட்ட இருக்கு. அப்பிடியிருக்க இப்பவே எந்தெந்தக் கட்சியில், அடுத்த ஜனாதிபதி வேட்பாளரா ஆராரை நிப்பாட்டப் போயினம் எண்டு ஊகங்கள் வரத்தொடங்கிட்டு.**

**மைத்திரி, சஜித், ரணில், பொன்சேகா, சம்பிக்க, விமல், கரு ஜெயசூரிய, பஸில் எண்டு ஒவ்வொரு பக்கத்தாலையும் ஒவ்வொரு ஆக்களின்ர பேரைச் சொல்லுகினம். இந்த லிஸ்டுக்குள்ள இப்ப திடீரெண்டு தம்மிக்க பெரேரா வந்து புகுந்திருக்கிறார்.**

**ஏற்கனவே மொட்டுக் கட்சியில கோத்தாபய ஜனாதிபதி வேட்பாளரா நிக்கமாட்டாரெண்டது தெரிஞ்ச சங்கதிதான். ஆனால் பஸிலுக்கு ஆசை இருக்குது. எண்டாலும் மஹிந்த வேற கணக்கு போடுறார். இனிமேல் மொட்டுக் கட்சியில ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த ஆக்கள் ஜனாதிபதித் தேர்தலில நிண்டால், அது கட்சிக்கு பெரும் தோல்வியைக் குடுத்திடும். அதால பேசாமல் வெளியில இருந்து ஒராளைக் கொண்டந்து ஜனாதிபதி ஆக்கிட்டு, அவரை தாங்கள் பின்னுக்கு இருந்து இயக்கிறமாதிரி அரசியல் செய்யலாம் எண்டதுதான் மஹிந்தவின்ர பிளான். அதுக்கு ஒரு ரிமோட் கொண்ட்ரோல் ஜனாதிபதி வேணும். தம்மிக்க பெரேராவுக்கு காணும், காணும் எண்டளவுக்கு காசு இருக்கு. அதோட அவருக்கு பெரிசா அரசியலும் தெரியாது. எலக்சனுக்கு தம்மிக்கவை ஜனாதிபதி வேட்பாளரா இறக்கினால், கட்சியில இருந்து ஒரு சதம்கூட செலவழிக்கத் தேவையில்லை. எல்லாத்தையும் தம்மிக்கவே பார்த்துக் கொள்ளுவார். அதோட அவருக்கு அரசியல் தெரியாததால எல்லாத்துக்கும் மஹிந்தவிட்ட தான் அட்வைஸ் கேப்பார்.**

**கூட்டிக் கழிச்சுப் பார்த்தால் ஒரு அடையாளத்துக்குதான் தம்மிக்க ஜனாதிபதியா இருப்பாரே தவிர, உண்மையில மஹிந்ததான் பின்னுக்கு நிண்டு அவரை இயக்குவார். முந்தி இப்பிடித்தான் பன்னீர்ச்செல்வத்தைத் தமிழகத்தின்ர டம்மி முதலமைச்சரா இருத்திப் போட்டு, ஜெயலலிதா பின்னுக்கு நிண்டு எல்லாம் தான் நினைச்சமாதிரி செய்தவா. கிட்டத்தட்ட அதே பாணியைத்தான் இனிமேல் மஹிந்த செய்யப் போறார் எண்டு கதை.**

**அப்பிடி ஒரு ஏற்பாடு நடக்கிறதாலதான், தம்மிக்க தனக்குப் பதிலா கட்சிக்குள்ள வாறதை பஸில் விரும்பேலை. அவர் வந்தால் பஸிலின்ர ஜனாதிபதிக் கனவு அம்போ ஆகிடுமே. ஆனாலும் அதையெல்லாம் மஹிந்த கணக்கில எடுக்கேலை. இனிமேல் அண்ணன், தம்பியெண்டு பாக்காமல் தன்ர அரசியலுக்கு மட்டும் முக்கியத்துவம் குடுத்துத்தான் மஹிந்த நடக்கப் போறாராம். அதாலதான் பஸிலுக்கு பிடிக்காத தம்மிக்கவை முதலில தேசியப்பட்டியல் எம்.பி.யாக்கி, அமைச்சராக்கி, ஜனாதிபதி ஆக்கவும் மஹிந்த திட்டம் போடுறார். அநேகமா நாளைக்கு தம்மிக்க எம்.பியாகி, பின்னேரமே அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்வாரெண்டு உள்வீட்டுக்க இருந்து தகவல்கள் வருகுது.**

**அடுத்த ரெடிமேட் ஜனாதிபதி ரெடியாகிட்டார்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லாதவர்களுக்கு உணவூட்ட சாவகச்சேரியில் அரிசித்தொட்டி

## வர்த்தகரின் முன்மாதிரியான நடவடிக்கைக்கு பாராட்டு மழை!

யாழ்ப்பாணம், ஜூன் 20

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், உண்ண வழியின்றி இருப்பவர்கள் எடுத்துச் செல்வதற்காக சாவகச்சேரியில் ஒரு வர்த்தக நிலைய உரிமையாளரால் அரிசித் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.**




அரிசியால் நிரவப்பட்டுள்ள அந்தத் தொட்டிக்கு அருகில், 'இன்றைய உணவுக்கு அரிசி இல்லாமல் வருந்தும் உறவுகள் இதிலிருந்து எடுத்துச் செல்லலாம்' என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகை வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி அடித்தட்டு மக்களை மிகையாகப் பாதித்துள்ளது. இதனால் பொருண்மியத்தில் மிகவும் நலிந்தவர்கள் வாழ வழியில்லாமல் தவறான முடிவெடுத்து உயிரிழக்கும் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த நிலையிலேயே அடித்தட்டு மக்களின் பசியைப்போக்கும் வகையில் இந்த உணவுத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. முன்மாதிரியான இந்தச் செயற்பாடு சமூக வலைத்தளத்தில் பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றது. இதுபோன்று இன்னும் பல இடங்களில் இவ்வாறான தொட்டிகள் அமைக்கப்படவேண்டுமென்றும், அதில் ஏனையவர்கள் தம்மால் இயன்ற அரிசியைக் கொண்டுசென்று போய் நிரவ வேண்டுமென்றும் பலரும் வலியுறுத்தி வருகின்றனர். (ம)

# கொழும்பை நீர் வெட்டும் வதைக்கிறது

கொழும்பு, ஜூன் 20

மின்தடை, எரிபொருள் தட்டுப்பாடு என்பவற்றுக்கு மேலதிகமாக நீர்வெட்டும் கொழும்பு நகர்ப்பகுதிகளில் உள்ள மக்களை வதைக்க ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் தொடக்கம் நேற்று வரை சுமார் 16 மணிநேரம் நீர்வெட்டு கொழும்பின் நகர்ப்பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. திருத்தப்பணிகளுக்காகவே இந்த நீர்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)

# மின்வெட்டு நேரம் அதிகரிக்கும் அபாயம்

கொழும்பு, ஜூன் 20

எதிர்காலத்தில் மேலும் ஐந்து மணித்தியாலங்களுக்கு மின்வெட்டு நீடிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சாரம் உற்பத்தி செய்வதற்குத் தேவையான டீசல் இருப்பு இல்லாத பட்சத்தில் மின்வெட்டுக் காலம் நீடிக்கப்படும் என இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ய)

# எதிர்வரும் இரு வாரங்களுக்கு பகலில் சீரான மின்விநியோகம்

கொழும்பு, ஜூன் 20

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 2 வாரங்களுக்கு பகல் பொழுதில் மின் விநியோகம் தடைப்படாது என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் இணைய வழியில் கல்வி நடவடிக்கைகளை மாணவர்கள் முன்னெடுக்க வேண்டியிருப்பதால், அதைக் கருத்திற்கொண்டே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார். (ய)

# இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 20

சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் மழையும் ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக்களில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-35 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாகப் பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேலும் கடல்நிலையானது புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே மின்னல் தாக்கம், கொந்தளிப்பு போன்றவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர் - என்றுள்ளது. (ம-14-இ)

# வாள்வெட்டுத் தாக்குதல் சந்தேகநபர் கைதானார்



யாழ்ப்பாணம், ஜூன் 20

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட குழுவால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. சந்தேகநபர்கள் தேடப்பட்டு வந்த நிலையில் அவர்களில் ஒருவர் மானிப்பாய் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். (ம-125)

# வடக்கு அரச திணைக்களங்களின் இயங்குநிலை வடக்கு மாகாண பிரதம செயலாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 20

எரிபொருள் நெருக்கடி காரணமாக, அரச அலுவலர்களைப் பணிக்கு அழைப்பதில் வரையறைகள் விதிக்கப்பட்டு, வீட்டிலிருந்து பணியாற்றும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வடக்கு மாகாண சபைக்குட்பட்ட அரச அலுவலகங்களின் இயங்குமுறை தொடர்பாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் பந்துலசேன சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:-

வடக்கு மாகாண சபைக்குட்பட்ட அரச திணைக்களங்கள், தடையின்றிய மக்கள் சேவையை வழங்கு [illegible] றுத்தப்படுகின்றது.

* திணைக்களத் தலைவர்கள் தங்களது அலுவலகத்தில் கடமையாற்றும் அலுவலகத்துக்கு அருகில் வசிப்பிடத்தைக் கொண்ட அலுவலர்களை தேவைக்கேற்ப சுழற்சி முறையிலும் கடமைக்காக அழைத்தல் வேண்டும்.

* திணைக்களத் தலைவர்கள் தங்களது அலுவலகத்தில் கடமையாற்றும் தூர இடங்களை வசிப்பிடமாகக்கொண்ட அலுவலர்களை அவர்களது வதிவிடத்துக்கு அருகிலுள்ள திணைக்களங்களின் கீழ் கடமைக்காக இணைத்தல் வேண்டும்.

* நிறுவனங்களை நடத்திச் செல்வது தொடர்பில் மேற்படி பொது அரச நிர்வாகச் சுற்றறிக்கைகளில் கவனம் செலுத்துவதுடன், மிகவும் சிக்கனமான முறையில் மின்சாரம், எரிபொருள் பாவனையை குறைக்கும் வகையில் திணைக்களச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடத்திச் செல்வதற்கு திணைக்களத் தலைவர்கள் தங்களது விசேட கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

* அரச நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க எதிர்வரும் 3 மாதங்களுக்கு வெள்ளிக்கிழமை தோறும் நிறுவனப் பிரதானியுடன் ஓரிரு அலுவலகர்கள் குறித்தொதுக்கப்பட்ட இடமொன்றில்வரையறுக்கப்பட்ட வளப்பாவனையுடன் இயங்குதல் வேண்டும். ஏனைய அலுவலர்களை விவசாய உணவு உற்பத்திகளில் ஈடுபடுவதற்காக ஊக்குவித்தல் வேண்டும் -என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாவகச்சேரி பகுதியில் பைஸர் தடுப்பூசி ஏற்றல்

சாவகச்சேரி, ஜூன் 20
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் பைஸர் தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
ஒரு தொகுதி பைஸர் தடுப்பூசி நேற்றுமுன்தினம் பணியகத்துக்கு கிடைக்கப்பெற்றதையடுத்தே அடுத்தவாரம் தொடக்கம் தடுப்பூசி ஏற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

# மன்னார் இரட்டைக் கொலை: மேலும் ஐவர் சரணடைந்தனர்

## அனைவரும் விளக்கமறியலில்



**மன்னார், ஜூன் 20**
**மன்னார் - நொச்சிக்குளம் கிராமத்தில் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாள்வெட்டில் சகோதரர்கள் இருவர் கொல்லப்பட்ட நிலையில், இந்தப் படுகொலைகளுடன் தொடர்புடைய மேலும் 5 பேர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.**

சரணடைந்த குறித்த 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.
கடந்த வெள்ளிக்கிழமை 10ஆம் திகதி காலை மன்னார் - நொச்சிக்குளம் கிராமத்தில் நிகழ்ந்த வாள்வெட்டில் சகோதரர்கள் இருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர்.
குறித்த சம்பவத்தில் 40 வயதுடைய யேசுதாசன் ரோமியோ மற்றும் 33 வயதுடைய யேசுதாசன் தேவதாஸ் ஆகிய சகோதரர்களே படுகொலை செய்யப்பட்டனர்.
குறித்த கொலை தொடர்பாக அடையாளம் காணப்பட்டுள்ள சந்தேகநபர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வந்தனர்.
இந்த நிலையில் தேடப்பட்டுவந்த 5 சந்தேகநபர்களும் சட்டத்தரணிகள் ஊடாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் சரணடைந்தனர். அவர்கள் மன்னார் நீதிவான் முன்பாக முன்னிலைப் படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
இந்தக் கொலை தொடர்பில் 8 சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### கசூரினா கடற்கரையில்

## மீனவர் உடைமைகள் விஷமிகளால் சேதம்

காரைநகர், ஜூன் 20
காரைநகர் - கசூரினா கடற்கரைக்கு சுற்றுலாவிகள் என்ற போர்வையில் வருகை தரும் சில குழுவினர் கடற்கரையைத் தாண்டி மீனவர்களின் பகுதிக்குச் சென்று மீனவர்களின் உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கின்றனர் என அந்தப் பகுதி மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
கசூரினாக் கடற்கரைக்கு வருகைதரும் சில குழுவினர் அங்குள்ள மறைவிடங்களில் மதுவருந்திய பின் மீனவர்களின் கடற்பகுதிக்குச் சென்று அங்குள்ள வலைகள், கட்டுமரங்கள் மற்றும் வள்ளங்களை சேதப்படுத்துகின்றனர். அத்துடன் அவர்களைத் தடுக்கும் மீனவர்கள் மீது தாக்குதலும் மேற்கொள்கின்றனர்.
தற்போதைய மண்ணெண்ணெய் நெருக்கடி மற்றும் மீனவ உபகரணங்கள் விலையுயர்வில் எமது உடைமைகளுக்குச் சேதம் விளைவிப்பதால் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஆகவே உரிய தரப்பினர் இந்தச் செயற்பாட்டை தடுத்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர். (ச-250)

## விபத்தில் மூவர் காயம்

கொடிகாமம்- பருத்தித்துறைவீதியில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியால் சென்ற சைக்கிளுடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த மூவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-9)

## உதயன் குழுமம் நடத்திய மாபெரும் மருத்துவ முகாம்





யாழ்ப்பாணம், ஜூன் 20
உதயவாழ்வு, உதயன் குழுமம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட தொற்றா நோய்ப் பிரிவு என்பன துணைவி கிராமமட்ட அமைப்புக்களுடன் இணைந்து நடத்திய மருத்துவ முகாம், துணைவி கிராம அபிவிருத்தி நிலையத்தில் நேற்று நடைபெற்றது.
உதயன் குழுமத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், அவரது பாரியார் யசோதை சரவணபவன், யாழ்ப்பாண சுகாதாரப் பணிமனை தொற்றா நோய்ப் பிரிவு மருத்துவர் நிக்சன் கமலராஜ் மற்றும் வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ஜெயந்தன் ஆகியோர் மங்கல விளக்கேற்றியதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.
மருத்துவ முகாமில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (ம)

### மறவன்புலவு - மணற்காடு

## வீதியின் சீர்குலைவு நிலையால் பஸ் சேவைகள் நிறுத்தப்படலாம்

### பொதுமக்கள் கவலை

சாவகச்சேரி, ஜூன் 20
தென்மராட்சி தெற்கு - மறவன்புலவு, மணற்காடு வீதி சீரமைப்பின்றிக் காணப்படுவதால் குறித்த வீதி ஊடாக இடம்பெறும் பேருந்துச் சேவைகள் நிறுத்தப்படும் அபாயம் உள்ளது என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-
1999ஆம் ஆண்டு சேதமடைந்து காணப்பட்ட மணற்காடு வீதி, அரசின் துரித மீட்சித் திட்டத்தின்கீழ் 2011ஆம் ஆண்டு சுமார் 3 கோடி ரூபா செலவில் சீரமைக்கப்பட்டது. அதன்பின்னர் அந்தப் பகுதியில் காற்றாலை அமைப்பதற்காக கனரக வாகனங்களின் பாவனை அதிகரித்ததால் வீதி தற்போது பெருமளவு சேதமடைந்துள்ளது. ஏனைய வாகனங்கள், செல்ல முடியாத அளவுக்கு வீதி தற்போது சேதமடைந்துள்ளது.
யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழி, மறவன்புலவு, தனங்களப்புப் பகுதிகள் ஊடாக சாவகச்சேரி வரை இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துச் சேவைகள் இடம்பெறும் ஒரேயொரு வீதி இதுவாகும். இந்த வீதியால் பேருந்துகள் பயணிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளதால் எந்த [illegible] பேருந்துச் சேவை இடை[illegible] காணப் படுகின்றது - என்றனர். (ம-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிதியுதவி

கொழும்பு, ஜூன் 20
காலி - உடுகம கல்வி வலயத்தை சேர்ந்த சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படும் ஆலயத்தின் பணிக்காக சந்நிதியான் ஆச்சிரமத்தால் 1 லட்சம் ரூபா நிதியுதவி அண்மையில் வழங்கப்பட்டது. குறித்த நிதியை மோகனதாஸ் சுவாமி நேரடியாகச் சென்று பாடசாலை அதிபரிடம் கையளித்தார். (ய-20)



யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் வசிக்கும் சூசை ஜேக்கப்பின் 50ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, லண்டன் பிரான்ஸில் வசிக்கும் அவரது பிள்ளைகளால் பொருளாதாரத்தில் நலிவுற்ற பாடசாலை மாணவர்கள் 5 பேருக்கு துவிச்சக்கரவண்டி அண்மையில் வழங்கப்பட்டது. (ய-63)



கொடிகாமம் தெற்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் ஆக்கத்திறன் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் தென்மராட்சி முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் போக்கட்டி அ.த.க.பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு திறந்து வைத்தனர். (ய-159)

## காத்திருந்து காத்திருந்து காலங்கள் போகுது...





கொடிகாமம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று பல கிலோமீற்றர் தூரம் வரை மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்களுடன் எரிபொருளுக்கு நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர். எரிபொருள் நிலையத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் வரை நட்சத்திர மஹால் மண்டபம் தாண்டி மோட்டார் சைக்கிள்களுடனும் கொடிகாமம் கோப்சிற்றியிலிருந்து காளிகோவில் வீதியூடாக பருத்தித்துறையில் அமைந்துள்ள பஸ்தரிப்பு நிலையம் வரை ஓட்டோக்களுடனும் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். (ஒ-14,159)

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு திருமுறை மனனப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 20
வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில், மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணி முதல் யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. போட்டிக்கு தரம் 1. 2 மற்றும் முன்பள்ளி மாணவர்கள் அனைவரும் பங்குபற்றலாம். முத்திநெறி அறியாத... , பூசுவதும் வெண்ணீறும்..... ஆகிய இரு திருமுறைகளையும் மனனம் செய்து ஒப்புவித்தல் வேண்டும்.
போட்டிக்கான கட்டணம் 150 ரூபாவாகும். விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 25 ஆம் திகதியாகும். போட்டிக்கான பரிசில்கள் ஜூலை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வழங்கப்படும். மேலும் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் அடுத்து முதல் 20 இடங்களைப் பெறுபவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.144 (82) நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்புகொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சை செயலர் சு.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார். (ஒ-14)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.
அதற்கமைவாக இன்று 20 ஆம் திகதி காலை 9 மணி மு.ப. 11 மணி வரை பிறவுண் றோட் கலட்டி வீதியிலும் மு.ப.11 மணி பி.ப. 1 மணி வரை வீரகத்தி பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கையிலும் பி.ப. 2.30 மணி மாலை 4 மணி வரை ஐயனார் கோவிலடியிலும் 21 ஆம் திகதி காலை 9 மணி மு.ப. 11 மணி வரை மெதடிஸ்த மிஷன் பாடசாலை கலட்டி இராமநாதன் வீதியிலும் மு.ப.11 மணி பி.ப. 1 மணி வரை சைவ பரிபாலன சபை நீராவியடியிலும் பி.ப. 2.30 மணி மாலை 4 மணி வரை ஆரோக்கியா மாதா கோவிலடி கஸ்தூரியார் வீதியிலும் 22 ஆம் திகதி காலை 9 மணி மு.ப. 11 மணி வரை கனகசபை வீதியிலும் மு.ப.11 மணி பி.ப. 1 மணி வரை பலாலி வீதி 4 ஆம் ஒழுங்கையிலும் பி.ப. 2.30 மணி மாலை 4 மணி வரை குமராசாமி வீதி கிராம அலுவலகத்திலும் 23 ஆம் திகதி காலை 9 மணி மு.ப. 11 மணி வரை ஆத்திசூடி சனசமூக நிலையத்திலும் மு.ப.11 மணி பி.ப. 1 மணி வரை ஞானக்குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதியிலும் பி.ப. 2.30 மணி மாலை 4 மணி வரை கலாஜோதியிலும் 24 ஆம் திகதி காலை 9 மணி மு.ப. 11 மணி வரை முருகமூர்த்தி வீதியிலும் மு.ப.11 மணி பி.ப. 1 மணி வரை கலைவாணி சனசமூக நிலையத்திலும் பி.ப. 2.30 மணி மாலை 4 மணி வரை தாமரை வீதியிலும் 27 ஆம் திகதி காலை 9 மணி மு.ப. 11 மணி வரை பெரியதம்பிரான் வீதியிலும் மு.ப.11 மணி பி.ப. 1 மணி வரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும் பி.ப. 2.30 மணி மாலை 4 மணி வரை கலைமகள் சனசமூக நிலையம் கே.கே.எஸ். வீதியிலும் 28 ஆம் திகதி காலை 9 மணி மு.ப. 11 மணி வரை பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கையிலும் மு.ப.11 மணி பி.ப. 1 மணி வரை பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையிலும் பி.ப. 2.30 மணி மாலை 4 மணி வரை அன்னசந்திர லேன் நாவலர் வீதியிலும் 29 ஆம் திகதி காலை 9 மணி மு.ப. 11 மணி வரை மணிக்கூட்டு ஒழுங்கையிலும் மு.ப.11 மணி பி.ப. 1 மணி வரை சபாபதி ஒழுங்கையிலும் பி.ப. 2.30 மணி மாலை 4 மணி வரை பூநாறி மரத்தடி ஒழுங்கையிலும் தடுப்பூசி ஏற்றப்படும். எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஓர் நாய்க்கான தடுப்பூசிக் கட்டணம் 50 ரூபா அறவிடப்படும் என்றும் யாழ்.மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-14)

## 786 தடம் இலக்க பஸ்ஸை
# குறித்த நேரத்துக்கமைய சேவையில் ஈடுபடுத்துங்கள்

**பொதுமக்கள் கோரிக்கை**

இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான காரைநகர்786 தடம் இலக்க பஸ்ஸை குறிப்பிட்ட நேரத்துக் கமைவாக சேவையில் ஈடுபடுத்துமாறு அரச ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
காரைநகர் துறைமுகத்தில் இருந்து வழமையாக காலை 7 மணிக்கு புறப்படவேண்டிய 786 தடம் இலக்க பஸ் காலை 7.10 மணிக்கு செல்கின்றது. இதனால் மருத்துவமனை உள்ளிட்ட அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், வேறு பணிகளுக்குச் செல்வோர், பருவகாலச் சீட்டுடன் பயணிக்கும் பொதுமக்கள் அனைவரும் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
கடந்த காலங்களில் குறித்த பஸ் காரைநகர் துறைமுகத்தில் இருந்து 7 மணிக்கு புறப்படுவதால் தாம் சரியான நேரமுகாமைத்துவத்தைக் கடைப்பிடித்தாகத் தெரிவித்தனர். ஆனால், தற்போது 7.10 மணிக்கு புறப்படுவதால் தமது பணி நேரங்கள் தாமதமாகின்றன என்று கவலை தெரிவித்துள்ளனர். இதே போன்று காரைநகர் துறைமுகத்தில இருந்து புறப்படும் பஸ் மாலை 5 மணிக்கு செல்வதையும் உறுதிப்படுத்த வேண்டும். மாலை 5.10 மணிக்கு துறைமுகத்தில் இருந்து புறப்படுவதால் தூரப் பிரதேசங்களுக்குச் செல்வோர் நேரம் தாமதமாவதால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் கவலை தெரிவித்தனர். எனவே 786 தடம் இலக்க பஸ்ஸை காலை 7 மணிக்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கு உடனடியாகத் தீர்வை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் இதற்கான தீர்வை விரைவில் எடுக்காவிட்டால், அனைத்துத் தரப்பினரையும் திரட்டி தீர்வு கிடைக்கும் வரை மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர். (ஒ-14-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பெருகிவரும் 'பெற்றோல் செற்' கலவரங்கள்

நாட்டில் பரவலாக 'பெற்றோல் செற்' கலவரங்கள் நிகழத் தொடங்கியுள்ளன. தங்கள் அன்றாட வேலைகளை விட்டு, பல மணித்தியாலங்கள், கிலோமீற்றர் கணக்கான வரிசையில், வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து கால்கடுக்க காத்திருந்த போதும், கடைசியில் 'எரிபொருள் இல்லை' என்றால் எப்படி இருக்கும்? அவ்வளவு நேரக் காத்திருப்பின் அவலங்கள் எல்லாம், பெருங்கோபமாக, மடை திறந்த வெள்ளம் போல பீறிட்டுக் கிளம்பும். அந்தக் கோபம் முன்னால் யார் எதிர்ப்பட்டாலும் நீதி, நியாயம் எதுவும் பார்க்காமல் தன் வீரியத்தைக் காட்டிவிடும். இப்போது இலங்கையில் குறிப்பாக வடக்கில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இப்படியான கூட்டுக் கோபங்களின் வெளிப்பாடுகளே வன்முறைகளாக வெடிக்கத் தொடங்கியிருக்கின்றன.

வவுனியாவில் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருவாகனங்கள் வரிசையில் நிற்கும் போது, தற்செயலாக முட்டிக் கொண்டதால் எழுந்த முரண்பாடு வாள் வெட்டு, தீ வைப்பு என்று விஸ்வரூபமெடுத்தாடியிருக்கிறது. சாதாரண தருணமொன்றில், இப்படியான தற்செயல் முட்டுப்பாடுகள் இவ்வளவுதூரம் வன்முறை வடிவமெடுப்பதில்லை. இரண்டு தரப்பும் ஏதோ ஒருவகையில் உடனடியாக சமரசமாகியிருக்கும். ஆனால், எரிபொருள் கிடைக்காத ஏமாற்றமும், வரிசையில் காத்திருந்த வெறுப்பும் கோபத்தோடு கலந்ததன் விளைவே வாகனத்துக்குத் தீ வைக்கவும், சக மனிதர்கள் நால்வர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தவும் தூண்டியிருக்கிறது.


இதேபோன்றுதான், முல்லைத்தீவு, விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் எரிபொருளுக்குக் காத்திருந்த மக்கள், தங்கள் கோபத்தை பொலிஸார் மீதும், படைத் தரப்பு மீதும் காட்ட முற்பட, இறுதியில் பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்க்குமளவுக்கு நிலைமை பாரதூரமாகியிருக்கிறது. ஒருவேளை, ரம்புக்கனையில் ஏப்ரல் 19ஆம் திகதி எரிபொருள் கோரி ஆர்ப்பாட்டம் செய்தவர்கள்மீது நடத்தப்பட்டதைப் போல, விசுவமடுவிலும் கண்மூடித்தனமான துப்பாக் கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் விளைவு கள் இன்னும் விபரீதமாகியிருக்கும். நல்லவேளையாக அப்படி ஏதும் நடக்கவில்லை, ஆனால் இனிவரும் காலங்களில் அப்படி மக்களை நோக்கி பொலிஸாரின் துப்பாக்கிகள் நீட்டப்படாது என்பதற்கு எந்த உத்தரவாத மும் இல்லை.

சீரான விநியோகமின்மை, விநியோகத்துக்கான உரிய பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படாமை, எரிபொருள் இருப்பு மற்றும் விலையேற்றங்கள் பற்றிய அரசாங்கத்தின் முன்யோசனையற்ற பாரதூரமான அறிவிப்புகள், பதுக்கல் நடவடிக்கைகள், மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் வழங்கல் என்பனவே இப்படியான எரிபொருள் வரிசைகளின் நீட்சிக்கு முக்கியமான காரணிகள். இவற்றில் பெரும்பாலானவை அரசாங்கத்தின் தவறுகளே. அரசாங்கம் விடுகின்ற தவறுகளுக்காக மக்கள் வரிசைகளில் நிற்கின்றார்கள். எரிபொருள் கிடைக்கவில்லையெனில் அவர்கள் வன்முறையைக் கையில் எடுக்கிறார்கள்.

இவ்வளவு நாளும் தென்னிலங்கையில் மட்டுமே இடம்பெற்ற எரிபொருளுக்கான வன்முறைகள் இப்போது வடக்கிலும் காலூன்றி விட்டன. இப்போதே அவற்றைத் தடுப்பதற்கான, எரிபொருளை சகலருக்கும் சீரான வகையில், நீண்ட வரிசைகளற்ற முறையில் வழங்குவதற்கான பொறிமுறையை அரசாங்கமும், அதிகாரிகளும் கண்டுபிடித்து நடைமுறைப்படுத்தா விட்டால், ஒவ்வொரு பெற்றோல் செற்றும் தினமும் போர்க்களமாக மாறும் கலவரபூமியாகிவிடும். எரிபொருளுக்காக ஆளையாள் அடித்துக்கொள்ளும் அவலம் இலங்கை முழுவதும் உருவெடுக்கும் முன்னதாக அரசாங்கம் தன் பக்கத் தவறுகளைத் திருத்திக்கொள்ள உரிய நடவடிக்கைகளைத் துரித கதியில் முன்னெடுக்கும்?

## நாளொரு நல்வார்த்தை

உலக வரைபடத்திலுள்ள
மூலை முடுக்குகளுக்கெல்லாம்
செல்ல விரும்புகிறாயா?
ஒரு நூலகத்துக்குச் செல்!
-டெஸ்கார்டல்



# கோத்தாபய விலகும்வரை எமது போராட்டம் ஓயாது

### காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் யாழ்ப்பாணத்தில் அழுத்தம்திருத்தம்

**கொழும்பு, ஜூன் 20**

**நாட்டில் பொருளாதார பிரச்சினையும் வாழ்வாதாரத்துக்கான தேவைகருதிய போராட்டங்களும் இடம்பெற்று வருவதால் 'கோத்தா கோ கம' போராட்டம் தொய்வடைந்து காணப்படுகிறது. ஆனாலும், கோத்தாபய ராஜபக்ச பதவிவிலகும்வரை எமது போராட்டம் ஓயாது என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.**

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டை ஆட்சி செய்த மோசமான ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் காரணமாகவும் தவறான வழிநடத்தல் காரணமாகவும் எமது நாட்டுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தவறான ஆட்சியால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன் பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இரண்டு வருடங்களாகப் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

எமது நூலகத்துக்குக் கிடைத்த நூல்களை நாம் நாடளாவிய ரீதியில் துன்பப்படுகின்ற மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானித்தோம். அந்தவகையில் நாம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கின்றோம்.

யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளமுடியாது. அப்பொழுது நாம் பிறக்கவும் இல்லை. எங்கள் கண்முன்னே நாங்கள் அமைத்த போராட்டக்களத்தை நெருப்பில் எரித்தார்கள். எமது கோத்தா கோ கம நூலகம் எரிக்கப்படுமோ என அஞ்சினோம். நூலகத்தை எரிப்பது என்பது சமூகத்தை வீழ்த்துவதற்கு முக்கியமானதாகும். காலிமுகத்திடல் கோத்தா கோ கமவில் இணைய வழியிலான பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க இருக்கின்றோம் - என்றனர். (ம-20)

# பல்கலைகளை மூடுவதால் நெருக்கடிகள் தீர்ந்துவிடாது

### பேராசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்குப் பல்கலைக்கழகங்களை மூடுவது தீர்வாகாது எனப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கண்டியில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அதன் தலைவர் பேராசிரியர் ஷாம் பன்னெஹேகா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


நெருக்கடி நிலையிலும் கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். பல்கலைக்கழகங்களை மூடுவது மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெரும் பாதிப்பை உண்டுபண்ணும். இதற்கு மாற்றுவழியைக் கண்டுபிடிக்க வேண்டுமே தவிர பல்கலைக்கழகங்களை மூடுவது பிரச்சினைக்குத் தீர்வாகாது- என்றார். (ச-இ)

நாளை 21.06.2022 செவ்வாய்க்கிழமை ஆனி 07

சுபநேரம் : 10.24 - 11.54
ராகுகாலம்: 02.54 -04.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலங்கையின் கல்வி வரலாற்றில் தொழிற்கல்வியின் வளர்ச்சிப்போக்கு' தொடர்பாக உதயனில் வெளியாகும் கட்டுரையின் மூன்றாவதும் இறுதியானதுமான பாகம் இன்று வெளியாகின்றது. முதலாவது பாகத்தில் 1972ஆம் ஆண்டில் ஏற்பட்ட கல்விமுறைமை மாற்றங்கள் பற்றியும் 1982ஆம் ஆண்டில் ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தம் பற்றியும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இரண்டாவது பாகத்தில் 13 வருட உத்தரவாத கல்வித் திட்டம் பற்றியும், உயர் கல்வியில் ஊட்டப்படும் தொழிற்கல்வி பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சி இன்று வெளியாகின்றது.



# இலங்கையின் கல்வி வரலாற்றில் தொழிற்கல்வியின் வளர்ச்சிப் போக்கு

திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம்,
கல்வியியல் துறைத்தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

த.சிவகுமார்
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்.

**இறுதிப் பகுதியின் சாராம்சம்**

க.பொ.த சாதாரண தரத் தகைமை அல்லது பூர்த்தி செய்யாமல் தொழிற்சந்தைக்கு பிரவேசிக்கும் நிலைமை பெரும் பிரச்சினையாக உள்ளதோடு இதனுடன் தொடர்புடைய தொழில் மற்றும் தொழில் வாய்ப்பின்மை இளைஞர் மத்தியில் பொதுவான ஒன்றாக அமைந்துள்ளது.

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், திறன் அபிவிருத்தி அமைச்சு ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்தும் இந்த வேலைத் திட்டம் ஒரு முன்னோடி வேலைத் திட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உயர்தரப் பாடத்துறைகளுக்கு இதுவரை சொந்தமாக இருந்த 6 பாடத்துறைக்கு மேலாக ஏழாவது பாடத்துறையாக தொழிற்கல்விப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. தொழில் பாடத்திட்டங்களின் பாடங்களைக் கற்று 2020ஆம் ஆண்டுக்கு அப்பால் பாடசாலையில் இருந்து சமூகத்துக்குப் பிரவேசிக்கும் மாணவ மாணவிகளுக்குத் தொழில்துறைக்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

இப்பாடத்துறை 3 பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1. பொதுப்பாடத்துறை
2. பிரயோக விடயத்துறை
3. நிறுவனஞ்சார் தொழிற்பயிற்சி

இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து கற்கும் மாணவர்கள் தரம் 12இல் முதலாம் தவணையில் பொதுப்பாடங்கள் ஒன்பதை எல்லா மாணவர்களும் கட்டாயம் கற்க வேண்டும்.

**பொதுப் பாடங்கள்**

1. முதலாம்மொழி (சிங்களம்/ தமிழ்)
2. பிரயோக ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல்திறன்
3. அழகியல் நயப்பு
4. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் திறன்
5. பிரஜைத்துவத்துக்கான திறன்
6. சமூக நன்நிலவுகைக்கு தேவையான சுகாதார மற்றும் வாழ்க்கைத் திறன்கள்
7. முயற்சியாண்மை திறன்
8. விளையாட்டு மற்றும் ஏனையபாட இணைச் செயற்பாடுகள்
9. தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டம்

இந்தப் பாடத் துறைகளூடாக தொடர்பாடல் திறமை, மொழியாற்றல், தொழிற் திறமை, தகவல் தொழிநுட்ப திறமை, தலைமைத்துவப் பண்புகள் போன்றவை அபிவிருத்தி செய்யக்கூடிய விதத்தில் செயற்பாடு சார்ந்த விதத்தில் தயாரிக்கப்பட்ட இந்தப் பாடநெறியை தொழிற் பாடத்தைக் கற்கும் சகல மாணவர்களும் கற்கவேண்டும்.

தரம் 12இல் இரண்டாம் தவணை, மூன்றாம் தவணைகளில் பிரயோகப்பாடங்கள் 28 இல் மூன்று பாடங்களைத் தெரிவுசெய்து கற்கமுடியும்.

**பிரயோக பாடத்துறை தொழிற்றுறைப் பாடங்கள்**

**சுகாதார மற்றும் சமூக சேவை**

1. பிள்ளை உளவியல் மற்றும் நலன் பேணல்
2. சுகாதாரம் மற்றும் சமூக நலன்பேணல்
3. உடற்கல்வி மற்றும் விளையாட்டு

**வடிவமைப்பு**

1. உள்ளக வடிவமைப்பு
2. அலங்கார வடிவமைப்பு
3. கிரபிக் வடிவமைப்பு
4. கலையும் வடிவமைப்பும்
5. தரை அழகு வடிவமைப்பு

**தொழில்நுட்ப கல்வி**

1. நிர்மாணத்துறை தொழிநுட்பம்
2. மோட்டார் இயந்திர தொழிநுட்ப கற்கைகள்
3. மின்மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்ப கற்கைகள்
4. புடைவை மற்றும் ஆடைத்தொழிநுட்ப கற்கைகள
5. உலோக நிர்மாண தொழிநுட்பக் கற்கைகள்
6. அலுமினிய இயந்திர தொழிநுட்ப கற்கைகள்

**சமூக கலாசார கல்வி**

1. அரங்காற்றல் கலைகள்
2. நிகழ்ச்சி முகாமைத்துவம்
3. கலையும் கைப்பணியும்

**உணவு தொழிநுட்பம்**

1. பிரயோக தோட்டக்கலை கற்கைகள்
2. கால்நடை உற்பத்தி தொழிநுட்பக் கற்கைகள்
3. உணவு தயாரிப்பு தொழிநுட்பக் கற்கைகள்
4. நீரியல் வளதொழிநுட்பக்கற்கைகள்
5. பெருந்தோட்ட உற்பத்தி தொழிநுட்ப கற்கைகள்

**சுற்றுலா மற்றும் விருந்தினர் உபசரிப்பு**

1. உல்லாசப் பயணம், விருந்தோம்பல்

**சுற்றாடல் துறை கல்வி**

1. சுற்றாடல் கற்கைகள்

**கனனி வன்பொருள் வலையமைப்பு**

2. உற்பத்தி
3. களஞ்சியப்படுத்தல்
4. விற்பனையும் சந்தைப்படுத்தலும்



அறிமுகப்படுத்தப்பட்ட தொழிற்பாடங்களில் மாணவர் விருப்பப்படி பாடங்களைத் தெரிவு செய்யும் ஆற்றல் இங்கு காணப்படுகின்றது. இவற்றின் கீழ் பாட அறிமுகம், கோட்பாட்டு அறிவு, செயன்முறையான செயற்பாடுகளில் ஈடுபடுதல் மேற்கொள்ளப்படும்.

தரம் 13இல் முதலாம் தவணை, இரண்டாம் தவணைகளில் தெரிவு செய்த மூன்று பாடங்களில் ஒன்றை மட்டும் தெரிவு செய்து கற்றுக் கொள்ளும் அதேவேளை தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் சென்று பயிற்சி பெறுவர். மூன்றாம் தவணையில் முழுமையாக தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவதுடன் செயற்றிட்டம், அறிக்கைகள் சமர்ப்பிப்பதன் மூலம் இப்பாட நெறியைப் பூர்த்தி செய்ய முடியும். தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் காலத்தில் வரவை அடிப்படையாகக் கொண்டு நாளொன்றுக்கு 500 ரூபா வீதம் மாதாந்தம் ஆயிரம் ரூபா கல்வி அமைச்சால் நேரடியாக அவர்களுடைய வங்கிக் கணக்குக்கு வைப்பில் இடப்படும். இந்தச் செயற்பாடானது கற்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதுடன் கற்கும் போதே வருமானத்தையும் பெறுவதனால் அவர்கள் இத் தொழில் துறைப் பிரிவில் பூரண ஆற்றலுடையவர்களாக உருவாவதற்கு இது வித்திடுகின்றது எனலாம்.



தொகுத்து நோக்குமிடத்து தொழிற்கல்வித்துறையின் அறிமுகமானது காலத்தின் தேவையாக உள்ளது எனலாம்.

உலகளாவிய அறிவுப்பொருளாதாரத்துக்கு ஏற்ப இலங்கைப் பிரஜைகளை உருவாக்க வேண்டியது கல்வியின் பணியாகும். இதற்கமைவாக கல்வித்துறையில் ஏற்பட்ட புதுப்புரட்சியாக 13 வருட உத்தரவாதக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தைக் குறிப்பிடலாம். கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், திறன் அபிவிருத்தி அமைச்சு ஒன்றிணைந்து அமுல்படுத்தும் இந்த வேலைத்திட்டம் ஒரு முன்னோடி வேலைத்திட்டமாகும். 2023ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தவுள்ள கல்விச்சீர்திருத்தமும் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது எனலாம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் இருந்து வந்த குழப்பம் விலகும். நண்பர்கள் உதவியுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திப்பீர்கள்.

**இடபம்:** நீங்கள் நினைத்த செயல் இன்று நிறைவேறும். புதிய தொழில் குறித்த சிந்தனை மேலோங்கும். பொதுப்பணியில் ஆர்வம் உண்டாகும். செயலை மற்றவர்கள் புகழ்வார்கள்.

**மிதுனம் :** வசதிகள் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழிலில் ஏற்பட்ட தடை விலகும். குடும்பத்தின் முன்னேற்றத்துக்காக முயற்சி அனுகூலமாகும்.

**கடகம்:** மனதில் தேவையற்ற குழப்பங்கள் உண்டாகும். விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். விரோதிகளின் கை மேலோங்கும். உங்கள் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறாமல் போகும்.

**சிம்மம்:** நிதானமாகச் செயற்பட்டு நினைத்ததைச் சாதித்துக் கொள்வீர்கள். மகிழ்ச்சியான நாள். உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த சங்கடம் அகலும். நல்ல எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**கன்னி:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள் என்றாலும் உங்கள் உடல் நலத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்கு நடப்பதற்கான அறிகுறிகள் தென்படும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்:** சாமர்த்தியமாகச் செயற்பட்டு தேவையை நிறைவேற்றிக்கொள்வீர்கள். நீங்கள் திட்டமிட்டிருந்த செயல்களில் மாற்றம் உண்டாகும். நிதானமான நாள். தொலைதூரப் பயணம் மேற்கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் தேடி வரும். மகிழ்ச்சியான நாள். தொழில் குறித்த முயற்சியில் வெற்றி உண்டாகும். எதிர்ப்புகள் குறையும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள்.


**தனுசு:** தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** உங்களுடைய நல்ல எண்ணம் இன்று நிறைவேறும். யோகமான நாள். நீங்கள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். மகிழ்ச்சியான சம்பவம் நடைபெறும்.

**கும்பம்:** உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். தொழிலை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை உருவாகும். கோவிலுக்குச் செல்வீர்கள். உங்கள் செயலுக்கு நண்பர்கள் உதவுவார்கள்.

**மீனம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள். நண்பரிடம் மனச்சுமையை இறக்கி வைப்பீர்கள். நிம்மதியான நாள். நேற்று சந்திக்க நினைத்த உறவினர் ஒருவர் இன்று உங்களைத் தேடி வருவார்.

# அசாஞ்சேயை நாடுகடத்த இணங்கியது இங்கிலாந்து



**லண்டன், ஜூன் 19**

**விக்கிலீக்ஸின் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சேயை நாடுகடத்துவதற்கு பிரிட்டன் உள்துறை அமைச்சு ஒப்புதல் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளின் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழல்கள் தொடர்பான இரகசிய ஆவணங்களை 'ஹக்' செய்து விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் வெளியிட்டு உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்சே.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா கொடுத்த நெருக்கடிகளின் காரணமாக கிட்டத்தட்ட 7 ஆண்டுகளாக இங்கிலாந்தில் உள்ள ஈக்குவடார் தூதரகத்தில் பதுங்கியிருந்தார் அசாஞ்சே.

ஈக்குவடார் தனது அடைக்கலத்தைத் திரும்பப் பெற்றதன் பின் கடந்த 2019 ஆம் ஆண்டு அசாஞ்சே கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் அவர் தென் கிழக்கு லண்டனில் பெல்மார்ஷ் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், உளவு குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சேயை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவதற்கான உத்தரவில் இங்கிலாந்து உள்துறை செயலாளர் பிரீத்தி பட்டேல் கையெழுத்திட்டுள்ளதாக உள்துறை அலுவலகம் அறிவித்துள்ளது.

இதனால் அசாஞ்சே விரைவில் அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்பட வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

அசாஞ்சே நாடுகடத்தப்படக் கூடாது என்று வலியுறுத்தி பிரிட்டனில் போராட்டங்கள் வெடிக்க ஆரம்பித்துள்ளன. (ம)



மிகக்குறுகிய காலத்தில் இரண்டாவது தடவையாக

# பிரிட்டன் பிரதமர் போரிஸ் உக்ரைனுக்குச் சென்றார்!

கீவ், ஜூன் 20

உக்ரைனில் ரஷ்யா படையெடுத்துள்ள சமகாலத்தில் இரண்டாவது தடவையாக பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் உக்ரைனுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஜோன்சன் ஏற்கனவே உக்ரைனுக்குப் பயணம் மேற்கொண்டு அந்த நாட்டில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்புத் தொடர்பாக சில நகர்வுகளை முன்னெடுத்த நிலையில், மிகக் குறுகிய காலத்துக்குள் அவர் இரண்டாவது தடவையாக அங்கு சென்றுள்ளமை சர்வதேச அரங்கில் பேசுபொருளாக மாறியுள்ளது.

இதுதொடர்பாக பிரதமர் போரிஸ் ஜோன்சன் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில், உக்ரைன் இராணுவத்திலுள்ள ஆயிரக்கணக்கான சிப்பாய்களுக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய வகையில் பெரியளவிலான பயிற்சியை இங்கிலாந்து வழங்க இருக்கிறது. உக்ரைனுடன் துணை நிற்போம் என்று ஜோன்சன் தெரிவித்துள்ளார். (ம)

# சூச்சியின் கூட்டாளிக்கு 21 ஆண்டுகள் சிறை!

நைபிட்டோ, ஜூன் 19

மியான்மரின் ஜனநாயக ஆட்சியாளரும், இராணுவ ஆட்சியின் கீழ் தற்போது சிறை வைக்கப்பட்டுள்ளவருமான ஆங் சான் சூச்சியின் நெருங்கிய கூட்டாளிக்கு 21 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பிடப்பட்டுள்ளது.

சூச்சியின் நெருங்கிய நண்பரான மியூட் மவுங் என்பவருக்கே ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆங் சாங் சூச்சியின் தேசிய ஜனநாயகக் கட்சியின் செய்தித்தொடர்பாளராக ஷா மியூட் செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



பாகிஸ்தான், கராச்சி மாகாணத்தைச் சேர்ந்த பண்ணை ஒன்றில் பிறந்த இரண்டு வார[illegible] சென்ரிமீற்றர் நீளம் கொண்ட [illegible] தை ஏற்படுத்தியுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டகாலப் பாதிப்புக்களை ஒமிக்ரோன் ஏற்படுத்தாது

## ஆய்வில் தகவல்

லண்டன், ஜூன் 20

உருமாறிய கொரோனா வைரஸ்களைவிட ஒமிக்ரோன் நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தாது என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் புதிய உருமாறிய கொரோனா ஒமிக்ரோன் வைரஸ் கண்டறியப்பட்டது. இந்த ஒமிக்ரோன் வைரஸால் பல நாடுகளில் கொரோனாப் பாதிப்பு அதிகரித்தது.

இந்தநிலையில் மற்ற உருமாறிய கொரோனா வைரஸ்களைவிட ஒமிக்ரோன் நீண்ட கால பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்பு குறைவு என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், அது தடுப்பூசியை முழுமையாக செலுத்தியவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (ச-இ)







கப்பலில்வந்த பெற்றோல் முடிந்து நாடு முடங்கும் நாள்.

அன்றே கணித்தார் சூர்யா













Rimaz Ahamed
17 June at 17:01

அடுத்தடுத்த மாதங்கள்ல என்னென்ன எதிர்பாக்கலாம்ன்னு சொல்றதுக்கு இந்த ரணில் PM ஆ இல்ல VOG யா.

# பருத்தித்துறை மருத்துவமனைக்கு மருந்துப் பொருள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20


பருத்தித்துறை ஆதார மருத்துவ மனைக்கு ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளன.


நாட்டின் பொருளாதார நெருக்கடியில் மருந்துப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மருத்துவமனை நிர்வாகத்தின் கோரிக்கைக்கமைய, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 1988ஆம் ஆண்டு உயர்தரப் பிரி வினர் 1.3 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களைக் கையளித்துள்ளனர்.

அத்துடன் நெல்லியடி என்.பி.சி.எம். அமைப்பால் முதற்கட்டமாக ரூபா 5 லட்சம் பெறுமதியான ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் வி.கமலநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அ.கேதீஸ்வரன், ஹாட்லிக் கல்லூரி அதிபர் ரி.கலைச்செல்வன், ஹாட்லிக் கல்லூரியின் 1988ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவின் பிரதிநிதிகள், என்.பி.சி.எம். அமைப்பின் தலைவர் தயாபரன், மருத்துவமனை நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ம-14,26)





# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் மாணவர்களுக்கு யோகா போட்டி

மன்னார், ஜூன் 20

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு யோகா தொடர்பான விழிப்புணர்வை ஊக்குவிக்கும் முகமாக யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் மருத்துவ விஞ்ஞானப்பிரிவு மற்றும் சமூக விஞ்ஞானப் பிரிவு ஆகியவற்றின் ஏற்பாட்டில் கடந்த 15ஆம் திகதி யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் யோகா போட்டி இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக இந்தியத் துணைத் தூதுவர் ராகேஸ் நட்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

போட்டியில் பிரிவு ஒன்றில் முதலாமிடத்தை யாழ். இந்துக் கல்லூரியும் இரண்டாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியும் மூன்றாமிடத்தை திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

பிரிவு இரண்டில் மன்னார் வட்டக்கண்டல் ஜி.ரி.எம்.எஸ். முதலாம் இடத்தையும், யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை இரண்டாமிடத்தையும், யாழ்.இடைக்காடு மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

போட்டிகளில் வெற்றிபெற்ற குழுக்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# மத்தியஸ்த சபைகளின் அமர்வுகள் ஒத்திவைப்பு

நாடுமுழுவதும் இடம்பெறும் மத்தியஸ்த சபை அமர்வுகளை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்க மத்தியஸ்த சபை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் தற்போது மத்தியஸ்த சபைகளின் அமர்வுகள் இடம்பெறுகின்றன.

இந்த நிலையில் மத்தியஸ்த சபைகளின் அமர்வுகளை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவால் மத்தியஸ்த சபைகளின் தவிசாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-250)



திருகோணமலை கடற்கரையைச் சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கரையோர பாதுகாப்புத் திணைக்களம், நகரசபையினர், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையினர் மற்றும் பசுமை வனம் அமைப்பினர் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர். (ய)



சுதந்திர ஊடக அமைப்பின் ஏற்பாட்டில் 'டிஜிற்றல் ஊடக பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை' என்ற தலைப்பில் ஊடக வியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை திருகோணமலையிலுள்ள விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ச-இ)

# பிடி அரிசி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

சுழிபுரம்மேற்கு, கலைமகள் அறநெறிப் பாடசாலை மாணவர்களால், தமது இல்லங்களில் சேகரிக்கப்பட்ட அரிசி வழங்கும் நிகழ்வு, கலைமகள் அறநெறிப் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

அகில இலங்கை சைவ மகா சபையால் கடந்த வருடம் மார்கழி மாதம் பிடியரிசித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாணவர்களும் தங்களது இல்லங்களில் உணவுகள் தயாரிக்கும்போது ஒருபிடி அரிசியை சேகரிக்குமாறு அரிசி திரட்டும் பைகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் சுழிபுரம் மேற்கு கலைமகள் அறநெறிப் பாடசாலை மாணவர்களால் கடந்த ஆறு மாதங்களாக, தமது இல்லங்களில் திரட்டப்பட்ட பிடி அரிசி, அகில இலங்கை சைவ மகாசபையின் பொருளாளர் அருள் சிவானந்தனிடம் சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவர் கோகுலநேசனால் ஒப்படைக்கப்பட்டது. (ம-14-125)





யாழ்ப்பாணம் - கொட்டடிப் பகுதியில் வசிக்கும் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவருக்கு பூமணியம்மா அறக்கட்டளை ஊடாக, இலங்கைக் கிளைத் தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரனால் சக்கர நாற்காலியொன்று அண்மையில் வழங்கப்பட்டது. (ய)



தலைமன்னார் மண்ணின் 5ஆவது குருவான கீத பொன்கலன் ஜொனாத்தன் கிருபைராஜ் கூஞ்ஞ கடந்த 16ஆம் திகதி மன்னார் பேராலயத்தில், மன்னார் மறைமாவட்ட ஆயர் முன்னிலையில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு, நேற்றுமுன்தினம் தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தில் தனது முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். (ம-14-213)





தீவக வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முதற்கட்ட விசேட செயலமர்வு தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.பவானந்தனின் தலைமையில், வேலணை துறையூர் ஐயனார் அமுதசுரபி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி ஸ்ரீரங்கநாதன் கருத்துரைகளை வழங்கினார். (ச)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூன். 20

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக, நாட்டு மக்களுக்கு சுபீட்சமானதொரு வாழ்வு வேண்டி, நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் - கோப்பாய், இடைக்காடு அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ பா.சோமசுந்தரக்குருக்களின் அருளாசியுரையும், வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தியாகிகள் தினம் கடைப்பிடிப்பு

வவுனியா, ஜூன் 20
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் பத்மநாபா மற்றும் போராளிகளின் 32ஆவது தியாகிகள் தினம் வவுனியாவில் அமைந்துள்ள முன்னணியின் காரியாலயத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது பத்மநாபாவின் திருவுருவப்படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுரைகளும் இடம்பெற்றன.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தர் கே.அருந்தவராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நகரசபைத் தலைவர் இ.கௌதமன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான ம.தியாகராஜா, இ.இந்திரராஜா உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ம-14-110)

# பொருளாதார நெருக்கடியால் வன்முறைகள் தீவிரமடையும்

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூன் 20**

**தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் மேலும் மோசமடைந்தால் வன்முறைகள் தீவிரமடையும் ஆபத்துக்கள் உள்ளன. பொதுமக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களுக்கு ஆட்சியாளர்கள் செவிசாய்ப்பதோடு, நிலைமைகளைச் சீர்செய்வதற்கு உடன் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

சமகால நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. பொதுமக்கள் அன்றாட வாழ்க்கையை முன்னெடுக்க முடியாத அளவுக்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளன. இவ்வாறான நிலையில் பொதுமக்கள் ஆட்சியாளர்களை நோக்கி தன்னெழுச்சியாக ஒன்றுகூடி கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். ஆனால், அதற்கு ஆட்சியாளர்கள் செவிசாய்ப்பதாக இல்லை.

அதேநேரம், பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளும் வழங்கப்படவில்லை. நாளுக்கு நாள் நிலைமைகள் மோசமடைந்து செல்கின்றன.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அப்பால் அரசியல் உறுதித்தன்மையற்ற நிலையும் வெகுவாக தோற்றம் பெற்றுள்ளது. இவ்வாறான நிலைமைகளைச் சீர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் உடன் மேற்கொள்ள வேண்டும்.

அதனை விடுத்து பாராமுகமாக இருப்பார்களாக இருந்தால் நிலைமைகள் மேலும் மோசமடையும். அவ்வாறு நிலைமைகள் மோசமடைந்தால் நாட்டில் வன்முறைகள் தீவிரமடையும் ஆபத்துக்கள் உள்ளன. அந்தவிதமானதொரு சூழல் ஏற்பட்டால் நாடு மீண்டெழமுடியாதவொரு நிலைமையே ஏற்படும்.

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு**

முன்னதாக பெரும்பான்மைத் தலைவர்கள் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதற்கு முன்வந்திருக்கவில்லை. இதன் காரணமாகவே ஏழு தசாப்தங்கள் கடந்தும் அந்தப் பிரச்சினை தீராப் பிரச்சினையாக மாறியுள்ளது. அதில் குறிப்பாக மூன்று தசாப்தங்களாக போர் நீடித்திருந்தது. தமிழர்களின் அபிலாஷைகளை ஏற்றுக்கொண்டு உரிய தீர்வை வழங்கியிருந்தால் நாடு தற்போது முகங்கொடுக்கும் நெருக்கடிகளைத் தவிர்த்திருக்க முடியும். இதனை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்வது அவசியம்.

தற்போதைய நிலையிலும் கூட, தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவது தொடர்பில் போதிய கரிசனைகளைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே, கடந்தகால வரலாற்றுப் படிப்பினைகள் மூலமாக புரிதல்களைப் பெற்று தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும் -என்றார். (ம)

# 1,500 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள்!

மன்னார் மற்றும் வவுனியாவில் தெரிவுசெய்யப்பட்ட ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு உலருணவுப்பொருள்கள் பெரியபண்டிவிரிச்சான் தேசிய பாடசாலையில் நேற்று வழங்கப்பட்டன.

மன்னார், மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் கிழக்கு, மேற்கு மற்றும் சின்னப் பண்டிவிரிச்சா கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கும், வவுனியா, செட்டிகுளம் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட பெரியதம்பனை கிராம அலுவலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன.

இலங்கை தலகல ஸ்ரீ ஸ்ரீத்தார்த அறக்கட்டளையுடன் சிங்கப்பூரைச் சேர்ந்த அமைப்பொன்றும் இணைந்து நாடு முழுவதும் 63.75 மில்லியன் ரூபா நிதிஒதுக்கீட்டில் 42 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு உதவும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-14-213)


# மரண அறிவித்தல்



**திரு.துரைச்சாமி பூலோகசிங்கம்**
**(புவிலோகசிங்கம்)**

இல.46, தாமரை வீதி, வண்ணார்பண்ணை, வண்மேற்கு, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.துரைச்சாமி பூலோகசிங்கம் அவர்கள் நேற்று (19.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் மார்க்கண்டு தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசாத்தியம்மா அவர்களின் பாசமிகு கணவரும் அருள்நேசன் (கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநல சேவைகள் நிலையம் கைதடி), அருட்செல்வன் (வெல்டிங் வேக் சொப் நாச்சிமார் கோயிலடி), அஜந்தி, அஜந்தன், அனுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகிலநேசன் (சாந்த கிளயர் கல்லூரி - வெள்ளவத்தை) அவர்களின் அன்பு மாமனாரும் பொன்னம்பலம், இரத்தினசிங்கம், சத்தியலிங்கம், ஜெயலட்சுமி, சிவலட்சுமி, சறோஜா, கனகலட்சுமி, பத்மினி காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர் மயில்வாகனம், சந்தானலட்சுமி, அருணகிரிநாதன், ஸ்ரீகுமாரி, கந்தராசா, பாக்கியலட்சுமி, அற்புதமலர், பவானி, அமரர் பாலகிருஸ்ணன், அமரர் தனபாலசிங்கம், இராசலிங்கம், சிவராசா, நிமலதாஸன் (இன்பன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜிந்துசா அவர்களின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2022) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று [illegible] மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**077 820 5566, 077 365 0243** தகவல்: குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு.பு.அருள்நேசன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு.துரைச்சாமி புவிலோகசிங்கம்**

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு, அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கைதடி கமநல சேவைகள் சமூகம்**

(CS 424021 16)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை பகுதித் தலைவர் **திருமதி கி.சிவலோஜினி** அவர்களின் கணவர்

**மாணிக்கம் கிருஷ்ணமூர்த்தி**

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு : 07.12.1959
இறப்பு : 19.06.2022

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்.

(cr 36230) (2.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆயிரத்து 100 ஏக்கர் காணிகளை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை

## கிழக்கு மாகாண ஆளுநர் உத்தரவு

திருகோணமலை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 100 ஏக்கர் காணிகளை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பயிர்ச்செய்கைக்கு விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே ஆளுநர் இவ்வாறு உத்தரவிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வரவிருக்கும் உணவு நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் அடையாளம் காணப்பட்டுள்ள காணிகளை விரைவில் விவசாயிகளிடம் கையளித்து, முடிந்தவரை அதிகமாக மக்களை விவசாயத்தில் ஈடுபட ஊக்குவிக்கத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

அனைத்து அரச திணைக்களங்களிலும் மாதிரித் தோட்டம் அமைக்க வேண்டும். அப்போது தான் மக்களுக்கு இது தொடர்பில் ஒரு செய்தியைக் கொடுக்கமுடியும். சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்தி முன்மொழிவுகள் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கலந்துரையாட வேண்டும் அல்லது இங்கு நாம் எடுக்கும் முடிவுகள் பயனற்றவை. இன்று எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமல், அதையடுத்த அமர்வின் நிகழ்ச்சி நிரலில் சேர்த்தால், நாம் எடுக்கும் முடிவுகளால் பயன் ஏதும் உண்டா? ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை அரசியல் மேடை என்று நினைக்கவேண்டாம். இந்த இக்கட்டான நிலையில் இருந்து மக்களை விரைவில் மீட்டெடுக்க வேண்டும். எனவே, சாத்தியமான அனைத்து நிலங்களிலும் நாங்கள் பயிரிடுவோம். எதிர் காலத்தில் உணவு நெருக்கடி ஏற்படாமல் தடுக்க ஒன்றிணைந்து முயற்சிப்போம் -என்றார்.

(ம-14)


# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் (R.D.O)
திருமதி வசந்தகோகுலன் துஷானி
அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் பெரியசாமி சிவஞானம் (செல்வராசா)**

அவர்கள் கடந்த (14.06.2022) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 45229) (3/6)

ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 12 - 1947



இறப்பு 18 - 06 - 2022

**தம்பிராசா தருமராயரத்தினம்**

கச்சாய் வீதி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு டச்சு றோட்டை வதிவிடமாகவும் காலஞ்சென்ற தம்பிராசா முத்துப்பிள்ளையின் அன்பு மகன் தருமராயரத்தினம் கடந்த 18.06.2022 சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் புவனேஸ்வரியின் (அம்பிகை) அன்புக் கணவரும் துஜியந்தன். கஜயன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கம்சனாவின் (ஜேர்மன்) அன்பு மாமனாரும் ஹித்விக்கின் அன்புப் பேரனும் யோகம்மா. பரமேஸ்வரியின் மைத்துனரும் காலஞ்சென்ற தர்மராணி மற்றும் தர்மறதி. தர்மேந்திரா. தவேந்திரராசா. தவாநந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2022) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்

**076 1007 266**

# மரண அறிவித்தல்

பிறப்பு . 22 . 01 . 1971



இறப்பு . 19 . 06 . 2022

**திருமதி சாந்தமலர் ஐங்கரன்**

(முன்னாள் முன்பள்ளி ஆசிரியை,
இணுவில் கந்தசாமி கோவில் இளந்தொண்டர்சபை)

கோண்டாவில் மேற்கு. கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தமலர் ஐங்கரன் நேற்று (19.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருமைத்துரை - பாக்கியலக்ஷ்மி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற இராசையா மற்றும் பொன்மலர் தம்பதியரின் அன்பு மருமகளும் ஐங்கரனின் (ஆசிரியர். யா/ இணுவில் இந்துக் கல்லூரி. யா/ குட்டிய புலம் அ.த.க. பாடசாலை) அன்பு மனைவியும். இலம்போதரன் (உயர்தரப் பிரிவு - 2022, யா/ இணுவில் இந்துக்கல்லூரி). புராந்தகி (தரம்- 10. யா/ உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்ற சுதாகரனின் அன்புச் சகோதரியும் குமரகுரு - வளர்மதியின் மைத்துனியும். ஆகீசன். ஏரகன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

**077 139 2475** (cs 45201) (2.6)

INTRODUCING DAILY DIRECT FLIGHT FROM

**JAFFNA TO CHENNAI/TRICHY**



| FLIGHTS* | DEPARTURE | ARRIVAL | FARES* |
| --- | --- | --- | --- |
| CHENNAI (MAA) – JAFFNA (JAF) | 08:00 | 09:00 | Rs.50,000 |
| JAFFNA (JAF) – TRICHY (TRZ) | 10:00 | 11:00 | Rs.40,000 |
| TRICHY (TRZ) – JAFFNA (JAF) | 12:00 | 13:00 | Rs.40,000 |
| JAFFNA (JAF) – CHENNAI (MAA) | 14:00 | 15:00 | Rs.50,000 |

Starting from 1st July, 2022.

Aircom E Travelss & Tours

No. 303, Stanley Road, Jaffna
Tel: +94 21-2219113
Mob: +94 77-7310414 / +94 77-5052715

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 01 . 1939



மறைவு 19 . 06 . 2022

**சண்முகலிங்கம் வள்ளியம்மை**

கைதடி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் வள்ளியம்மை நேற்று (19.06.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பறுபதம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும், குஞ்சுப்பிள்ளை பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான செகசோதியம்மா, சிவபாக்கியம், கனகமணி மற்றும் பேரின்பலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறிதரன், கலாதேவி, கிரிதரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், லோககாந்திமதி, பேரின்பநாதன் (அதிபர்-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), உஷாநந்தி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மேருஜா (மருந்தாளர் - மார்பு நோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்) - சுவர்ணன் (ஆசிரியர் - கிளி/ஐயனார்புரம் அ.த.க.பாடசாலை), கபில்ஜா (உயர்தர மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஹிஷோக் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு, கைதடி


**077 616 5573**
**021 205 7131**

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 12 . 1959



இறப்பு 19 . 06 . 2022

## திரு. மாணிக்கம் கிருஸ்ணமூர்த்தி

(ஓய்வுபெற்ற மருந்தாளர்)

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கிருஸ்ணமூர்த்தி நேற்று (19.06.2022) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவலோஜினியின் (ஆசிரியை - யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்), பாசமிகு கணவரும், அபிநயாவின் (யா/ சுண்டிக்குழி மகளிர் கல்லூரி - மாணவி) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் பராசத்தி, சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி), சிவகுமாரன் (ஓய்வுபெற்ற எழுது வினைஞர்), குமாரசாமி (கனடா), சிவயோகம் (ஓய்வு நிலை ஆசிரியர்), சிவகுமாரி (ஆசிரியை - யா/ டிறிபேக்கல்லூரி) சிவஞானம் (இரத்த பரிசோதகர் MOH - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபாஸ்கரன் (சுவிஸ்), இரவிகரன் (ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர்), தெய்வலோஜினி (ஜேர்மனி), தவலோஜினி (ஆசிரியை), ஐங்கரன் (ஜேர்மனி), தனபாலசிங்கம் (பிரான்ஸ்), சந்திரகுமாரி (ஓய்வுநிலை ஆசிரியர்), மாங்கையற்கரசி, அமிர்தாம்பிகை (கனடா), சிவபாதசுந்தரம் (ஓய்வு நிலை ஆசிரியர்), பேரின்பநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.06.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கைதடி ஊரியான் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 310 5463
077 843 2493

தகவல்:
குடும்பத்தினர்

(ல. 36231)(2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 04 . 1963



உதிர்வு 30 . 06 . 2021

## அமரர் திருமதி பி.உமாசங்கரி முத்துக்குமாரன் (B.A Hons)

(முன்னாள் வரலாற்றுத்துறை விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், முன்னாள் உதவி ஆசிரியர் "சுடர் ஒளி" பத்திரிகை)

திதி: 20.06.2022

எமது குடும்ப விளக்கு விண்ணுலகம் புகுந்து இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது ஆயினும் அவரது பிரிவு இன்றும் எம் மனதை வருடிக் கொண்டேயிருக்கிறது. மகாபாரதத்தை பிதாமகர் பீஷ்மர் எப்படி வழிநடத்திச் சென்றாரோ அதே மாதிரி எமது குடும்பதையும் நெறிப்படுத்தியவர் இவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இந்நாளில் எமது குல தெய்வம் வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா உடனுறை வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்

பிரதீஸ் செந்தூர்குமரன்(மகன்)
மற்றும் குடும்பத்தினர்

(CS 4693)(3/6)

# மரண அறிவித்தல்

## திருமதி சரவணமுத்து செல்லம்மா

நயினாதீவு. 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரவணமுத்து செல்லம்மா அவர்கள் (18.06.2022) சனிக்கிழமை அன்று நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலாயுதம்-வைரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகலிங்கம்-வள்ளியம்மை (குஞ்சரம்) தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் சரவணமுத்துவின் ஆருயிர் துணைவியும் லலிதாம்பாள் (கனடா), கனகலிங்கம் (விற்பனை முகவர் தேசிய லொத்தர் சபை யாழ்ப்பாணம்), தெய்வீகராணி (சுவிஸ்), காலஞ்சென்ற பூர்வீகராணி மற்றும் லோசனாராணி (ஆசிரியை, கைதடி குருசாமி வித்தியாலயம்), மதியழகன் (ஆசிரியர், ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்) ஆகியோரின் அருமைத் தாயாரும் மகாலிங்கம் (கனடா), திலகவதி (விநியோக முகவர் தே.லொ. சபை யாழ்ப்பாணம்), கிருஷ்ணபிள்ளை (சுவிஸ்), பத்திநாதர், சிவசேகரம், ஜெயந்திமலர் (ஆசிரியை, சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான முத்தம்மா, பரமநாதன், சபாரத்தினம் மற்றும் லோகாம்பிகை, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சாந்தலிங்கம் சிவப்பிரகாசம் மற்றும் சண்முகநாதன், காலஞ்சென்ற கனகரத்தினம், அன்னம்மா, புவனேஸ்வரி மற்றும் கொங்காதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் நகுலேஸ்வரன்-சசிகலா (அமரர்), மாலினி-லோகநாதன், சாந்தினி- தயாபரன், டினேஸ்வரன்-புராதனி, நந்தகோபன், துஷ்யந்தி, சுபாசினி-சண்முகதாஸ், செந்தூரன்-கேதாரணி, மயூரன் (அமரர்) மற்றும் சிவகரன் விஸ்ணவி, விஸ்ணவன், நீகன்-அபர்ணா, பிரியா-கேதீஸ்வரன், சிந்து-சியான்பேட், கஜீன், பிரணவன், சிந்தூரி-ஜீவர்த்தனன், மயூரி-பிரதீப் ஆகியோரின் அருமை பேர்த்தியும் கதிரவன், கிருஷாந், நிருசிகா, டினுசிகா, கிருஷிகன், யதுசிகா, அனுஜன், புவிகா, அஞ்சனா, சஸ்வின், சாய் ஆதவன், ஆதிரன், சன்விகா, ஜக்சிகா, கிறேசியா, கபித்தனன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று சல்லிபரவை இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



5ஆம் வட்டாரம்,
நயினாதீவு

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### எரிபொருள்....

வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் தனியார் வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டு முறையைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசிக்கின்றது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அத்தியாவசிய சுகாதார சேவைகளுக்காக எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெள்ளிக்கிழமைகளில் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள் நாட்டுக்கு வரும்வரை, அடுத்த 3 தொடக்கம் 4 நாள்களுக்கு மக்கள் எரிபொருளுக்காக வரிசையில் நிற்கவேண்டாம் என்றும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று நடத்திய விசேட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுப் போக்குவரத்து, முச்சக்கர வண்டிகள், பிற போக்குவரத்துச்சேவைகள் மற்றும் அத்தியாவசியச் சேவைகளுக்கு ஏற்கனவே பல்வேறு முறைமைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்தப்படும் தனியார் வாகனங்களுக்கு வாகன இலக்கத் தகடு முறைமை பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

உதாரணமாக இலக்கத்தகட்டில் கடைசி இலக்கம் ஒற்றையாயின் அவர்களுக்கு ஒரு தினத்திலும் , கடைசி இலக்கம் இரட்டையாயின் அவர்களுக்கு பிறிதொரு தினத்திலும் எரிபொருள் நிரப்ப ஆலோசிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் விளக்கமளித்தார்.

இந்தச் செயன்முறை இன்னமும் முடிவடையவில்லை. இருப்பினும் வரையறுக்கப்பட்ட எரிபொருள் இருப்புக்களை நிர்வகிக்கவும், எரிபொருள் வரிசைகளின் அவசரத்தைக் குறைக்கவும் இதுபோன்ற செயன்முறை ஒன்றைச் செயற்படுத்தப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

அத்தியாவசிய சுகாதார சேவைகளுக்காக எரிபொருள் பெறுவது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், எரிபொருள் நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பணியாளர்கள் பணிக்கு சமுமளிக்க முடியவில்லை, அதனால் மருத்துவமனைகளில் சத்திர சிகிச்சைகள் கூடத் தாமதமாகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அவசர சுகாதார சேவைகளுக்கு ஒதுக்கப்படும் வகையில் மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பரிந்துரைக்க வேண்டும் என்று சுகாதார அதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளின் அத்தியாவசியச் சேவைகள் தடையின்றித் தொடரும் வகையில் மீதமுள்ள சுகாதார ஊழியர்களுக்கும், பொதுப் போக்குவரத்து ஊடாக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

எரிபொருள் வரிசைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர், பெற்றோல் மற்றும் டீசல் ஏற்றுமதிக்காக 90 மில்லியன் அமெரிக்க டொலருக்கான கடன் பத்திரம் திறக்கப்பட்டுள்ளது. ஜூன் 23 ஆம் திகதி பெற்றோல் நாட்டுக்கு வரும், ஜூன் 24 ஆம் திகதி டீசல் நாட்டுக்கு வரும். புதிதாக நாட்டுக்கு எரிபொருள் வரும்வரை, அடுத்த 3 முதல் 4 நாள்களுக்கு எரிபொருளுக்காக வரிசையில் நிற்க வேண்டாம் என்று பொது மக்களை கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

தனியார் பஸ்களுக்குத் தேவையான எரிபொருளை இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களின் ஊடாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதனால் தனியார் பஸ் நடத்துநர்கள் ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ-எ-இ)

### தமிழகத்தில்...

விமான சேவைகள் நடத்தப்படவுள்ளன.

இந்த விசேட விமான சேவைகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் எதிர்வரும் 14ஆம் திகதிவரை தினமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வரும் தமிழக யாத்திரிகர்களுக்கான தங்குமிட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன என்று பயண ஒழுங்குக்கு பொறுப்பான நிறுவனம் தனது அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளது. (அ-எ-இ)

### வவுனியா...

எச்சங்கள் கடந்த முதலாம் திகதி முதல் காணாமல் போயிருந்தார் என்று தெரிவிக்கப்படும் மாமடுவைச் சேர்ந்த 29 வயதுடைய நபருடையதாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவரைக் கடந்த முதலாம் திகதி முதல் காணவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரதேச வாசிகள் இவரைத் தேடி வந்த நிலையிலேயே மனித உடல் எச்சம் மீட்கப்பட்டுள்ளது.

உடல் எச்சங்களுக்கு அருகில் நஞ்சுப் போத்தல் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டது. ஆயினும் எவ்வாறு மரணம் சம்பவித்தது என்பது தொடர்பில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே தெரிவிக்க முடியும் என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாமடுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-110)

### தேசிய...

கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றை ஒக்ரோபர் அல்லது நவம்பர் மாதங்களில் நடத்துவதற்கும், டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சாதாரண தரப் பரீட்சையை அடுத்து ஆண்டு பெப்ரவரி மாதம் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஏற்கனவே திட்டமிட்டபடி பாடசாலைச் செயற்பாடுகளைத் தொடர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். (அ-எ-இ)

### சிக்கலைத்...

கடந்த 2 மாதங்களுக்கு மேல் இந்த நெருக்கடி தொடர்கின்றது. எரிபொருள் பற்றாக்குறை காரணமாக சகல சேவைகளும் முடங்கும் நிலைக்கு வந்து விட்டன.

கொரோனாத் தொற்றின்போது முழுமையாக இயங்கிய மருத்துவ சேவைகள் கூடத் தற்போது ஸ்தம்பிதம் அடையும் நிலையில் உள்ளன.

இலங்கையின் வடபகுதிக்கு எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்களை இலகுவாகப் பெற இலங்கை அரசாங்கத்தின் சட்டத்தின் கீழும் இந்திய அரசாங்கத்தின் சட்டத்தின் கீழும் கச்சதீவு புனிதப் பிரதேசத்தை பொருளாதார மீட்பு வலயமாக செயற்படுத்துவதன் ஊடாக எமக்கு ஏற்படுகின்ற பொருளாதார அழிவில் இருந்து மீளலாம்.

இது தொடர்பாக மதத் தலைவர்களும் அரச அதிகாரிகளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்தல் அவசியம் ஆகும்- என்றுள்ளது. (அ-எ-இ)

### ஐ.எம்.எப்...

என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 9ஆம் திகதி முதல் கடந்த மாதம் 24ஆம் திகதிவரை நடந்த மெய்நிகர் கலந்துரையாடலில் எட்டப்பட்ட முன்னேற்றத்தைக் கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும் ஏற்பாட்டின் மூலம் ஆதரிக்கப்படக்கூடிய பொருளாதார வேலைத் திட்டம் பற்றிய விவாதங்கள் தொடரும் என்று சிறிலங்காவுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் குழு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

### வழிப்பறியில்...

3 லட்சம் ரூபா பணத்தை கத்தி முனையில் வழிப்பறி செய்ய முயன்றபோது, இவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

புத்தூர் பகுதியில் வியாபாரம் செய்யும் இறைச்சி வியாபாரி வல்லைப் பகுதியூடாக வீட்டுக்குச் சென்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் கத்தி முனையில் அச்சுறுத்திப் பணத்தைப் பறிக்க முயன்றுள்ளனர்.

சாதுரியமாகச் செயற்பட்ட வியாபாரி அவர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்துள்ளார். அந்த வீதியால் வந்தவர்களும் பிடிபட்ட இளைஞரை முறையாகக் கவனித்தனர்.

தப்பிச் சென்ற மற்றைய இளைஞன் நாவல்காட்டுப் பகுதியில் உள்ள கோயில் கேணி ஒன்றில் கால் கழுவிக் கொண்டிருந்தபோது இளைஞர்களால் பிடிக்கப்பட்டான்.

குறித்த இருவரும் வழிப்பறி செய்த பணம் உடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது. அவர்கள் இருவரையும் முறையாகக் கவனித்த பொதுமக்கள் அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம், புறநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

### பீரிஸின்...

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் ஆலயம் அருகில் ஆரம்பமாகி, யாழ்ப்பாணத்தில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவர் கள அலுவலகம் வரை பேரணியாகச் சென்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை, சிறிலங்கா அரசாங்கம் தவறான தகவல்களை வழங்கி வழி நடத்துகின்றது என்று தெரிவித்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தெரிவித்துள்ள கருத்துக்களைக் கண்டித்து, அதற்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், வெளிவிவகார அமைச்சரின் கொடும்பாவியையும் எரித்தனர். ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை ஐ.நா. அலுவலகத்தில் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கைதிகளின் உறவினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் சமூகத்தினர், அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ-எ-20)

### பார்த்தீபன்...

பங்கேற்பதற்காக யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டார்.

2017ஆம் ஆண்டு தந்தையின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்க யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்ட அவர், அதன் பின்னர் இப்போது அவரது தாயின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்பதற்காக சிறை அதிகாரிகளால் அழைத்து வரப்பட்டார்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்த பார்த்தீபனின் தாய் விக்னேஸ்வரநாதன் வாகீஸ்வரி கடந்த புதன் கிழமை காலமானார்.

தனது மகனின் விடுதலைக்காகத் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருந்த இவர், மகனின் விடுதலையைக் காணாமலேயே உயிர் பிரிந்தார்.

1996ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பார்த்தீபன், கடந்த 26 ஆண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இலங்கை மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அவருக்கு ஆயுள் தண்டனை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது அந்த வழக்கு நடைபெற்று வருகின்றது. (அ-எ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக ஆஸி சென்ற 41 பேர் நாடு கடத்தப்பட்டனர்!

சிட்னி, ஜூன் 20
அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சட்டவிரோதமாகச் செல்ல முயன்ற 41 பேரை அவுஸ்திரேலியா அரசாங்கம் மீண்டும் இலங்கைக்கு திரும்பி அனுப்பியுள்ளது.
41 பேர் கொண்ட குழுவொன்று படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட வேளை அவுஸ்திரேலிய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டு பின் மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.
நீர்கொழும்பு, முல்லைத்தீவு, சிலாபம், உடப்புவ, தொடுவாவ மற்றும் மாரவில ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.
இவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் நீர்கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
இதன்போது அவர்களில் 37 பேருக்கு பிணையும் இந்தச் சட்டவிரோத கடற் பயணத்தை ஒழுங்குபடுத்திய நால்வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-இ)

## வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 20
மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தால் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் திகதி, யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகத்திலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
அத்துடன் https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 0212117116 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்யுமாறு அறிவித்துள்ளனர்.
அத்துடன் தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன், புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டுந்தாள் என்பவற்றையும், யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்துக்குச் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவித்துள்ளனர். (ம-14)

## யானை தாக்கி ஒருவர் இறப்பு!

திருகோணமலை, ஜூன் 20
திருகோணமலை, அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யானை தாக்கியதில் நேற்றுமுன்தினம் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கந்தளாயில் இருந்து மெதிரிகியவுக்கு மோட்டார் சைக்கிளில் குறித்த நபர் பயணித்த வேளையில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக் போபுர மற்றும் மெதிரிகிரிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## கொரோனா காப்புறுதி நீக்கம்

கொழும்பு, ஜூன் 20
வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வைத்திருப்போருக்கு கட்டாயமாக்கப்பட்ட கொரோனா காப்புறுதித் திட்டத்தை நீக்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
அறிக்கை ஒன்றை வெளியிட்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.
அதன்படி குறித்த காப்புறுதித் திட்டம் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பான எழுத்துமூல அறிவித்தல் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## இராணுவத்தினரின் கார் மோதி குழந்தை உட்பட மூவர் காயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20
புன்னாலைக்கட்டுவன் சந்தியில் நேற்று நடந்த விபத்தில் 9 மாதக் குழந்தை உட்பட மூவர் காயமடைந்துள்ளனர். சைக்கிளில் பயணித்தவர்கள் மீது இராணுவத்தினரின் உபயோகத்தில் உள்ள கார் மோதி விபத்து நடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
தங்களது 9 மாதக் குழந்தையுடன் தம்பதி சைக்கிளில் பயணித்தபோது, பலாலி நோக்கிப் பயணித்த இராணுவத்தினருக்குச் சொந்தமான கார் சைக்கிளுடன் மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது. சைக்கிளில் பயணித்த மூவரும் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
காரைச் செலுத்திய 24 வயது இராணுவச் சிப்பாய் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)



## பொரங்கட பிரதேசத்தில் ஒருவர் அடித்துக்கொலை

கொழும்பு, ஜூன் 20
கேகாலை- தெரணியகல- பொரங்கட பிரதேசத்தில் நபரொருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரணியகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
தனிப்பட்ட தகராறில் ஏற்பட்ட மோதலில் குறித்த நபர் பலத்த காயமடைந்துள்ளார். அவர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.
உயிரிழந்தவர் 24 வயதானவர் என்று தெரிவித்த தெரணியகல பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14.இ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- ✔ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
- ✔ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
- ✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✔ நன்னீரூற்று
- ✔ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- ✔ மூன்று வழிப் பாதை மேட்டு நிலம் கைதடி சந்தி 500 M தூரம்
- ✔ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ 1 பரப்பின் விலை 3 லட்சம்
- ✔ பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை.

தொடர்பு: 076 658 3621
076 436 5814

(CS 4664) 1-6


# தேங்காயின் விலை ரூ.200ஆக உயரும்

*தென்னை உற்பத்தியாளர் சங்கம் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 20
நாட்டின் தற்போதைய நெருக்கடியால் தேங்காயின் உற்பத்திச் செலவை சமாளிக்கும் வகையில் தேங்காய் விலை 200 ரூபாவாக உயர்த்தப்படலாம் என தென்னை உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் சங்கத்தின் நிறைவேற்று உறுப்பினர் பேராசிரியர் தீபால் மத்யூ தெரிவித்ததாவது:-
தற்போதைய பொருளாதார நெருக்கடி 2025ஆம் ஆண்டுக்குப் பின்பும் நீடித்தால் தேங்காய் உற்பத்தி நாட்டில் பெரும் வீழ்ச்சியை எதிர்கொள்ளும். இதனால் தேங்காய் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். தென்னைச் செய்கைக்கு உரப்பிரச்சினை உள்ளிட்ட இதர உற்பத்திச் செலவும் கணிசமாக உயர்ந்துள்ளது.
ஒவ்வொரு மாதமும் சுமார் 150 மில்லியன் தேங்காய்கள் உள்நாட்டில் நுகரப்படுகின்றன.
மேலும் 100 மில்லியன் தேங்காய்கள் பதப்படுத்தும் தொழிலுக்கு அனுப்பப்படுகின்றன. ஆனால், தற்போதைய நெருக்கடி நிலையால் பதப்படுத்துவதும் ஏற்றுமதி செய்வதும் பாதிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வடக்கில்
24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
நிலப்பரப்பு
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியில் இருந்து 2½ இரண்டரைக் கிலோமீற்றர் தூரத்தில் (சமூர்த்தி வங்கி முன் காபற் வீதியில்)
- கைதடி வடக்கு உப தபாலகம் அருகாமையில்
- நன்னீர் விவசாய நிலங்கள் (நிலப்பரப்பு) குடியிருப்புக்கள் அமைந்துள்ள பகுதி
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும் (250000/-)

தொடர்பு:- 077 288 0152
077 259 0391


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.